## February 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆப்பிரிக்க நாடான சோமாலியாவில் நிலவும் கடும் வறட்சி மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாக, அந்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு, ஊட்டச்சத்து உதவிகள் வரும் ஏப்ரல் மாதத்துக்குள் முழுமையாக நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.வின் உலக உணவுத் திட்டம் அமைப்பு எச்சரித்துள்ளது.

(i) சர்வதேச நாடுகளிடம் இருந்து போதிய நிதியுதவி கிடைக்கப் பெறாததே இந்த இக்கட்டான நிலைக்குக் காரணம் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(ii) சோமாலியாவில் தொடர் வறட்சி மற்றும் அதிகரித்து வரும் மோதல்களால் சுமார் 44 லட்சம் மக்கள் உணவின்றித் தவிக்கின்றனர். இதில் சுமார் 10 லட்சம் மக்கள் ஒரு வேளை உணவுக்கே வழியின்றி உயிர் பிழைக்கப் போராடி வருகின்றனர்.

(iii) இவ்வாறு நிலைமை மோசமாக இருந்தாலும் போதிய நிதியுதவி கிடைக்கா விட்டால், மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் மனிதாபிமானப் பணிகள் முற்றிலுமாக முடங்கும் என்று உலக உணவுத் திட்டத்தின் அவசரகாலப் பிரிவு இயக்குநர் ராஸ் ஸ்மித் கவலை தெரிவித்துள்ளார்.

(iv) கடந்த ஆண்டு 22 லட்சம் பேருக்கு உணவு வழங்கப்பட்ட நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை வெறும் 6 லட்சமாகக் குறைந்துள்ளது. கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஊட்டச்சத்து உதவிகள் 75 சதவீதம் வரை குறைந்துவிட்டன. உணவு விநியோகத்தைத் தடையின்றி தொடர, 9.5 கோடி டாலர் நிதியுதவி உடனடியாகத் தேவைப்படுவதாக ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

(v) கடந்த 2022-இல், இதே போன்ற ஒரு சூழலில் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பால் பெரும் பஞ்சம் தவிர்க்கப்பட்டது. ஆனால், தற்போது சர்வதேச உதவிகள் குறைந்து வருவதால், சோமாலியா மீண்டும் ஒரு பெரிய பேரழிவைச் சந்திக்குமோ என்ற அச்சம் சமூக ஆர்வலர்களிடையே எழுந்துள்ளது.

2. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த உலகளாவிய இறக்குமதி வரிகள் செல்லாது என அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், இதுவரை வசூலிக்கப்பட்ட சுமார் 17,500 கோடி டாலர் வரிப்பணம் மீண்டும் திரும்பக் கிடைக்குமா என்ற கேள்வி உலக வர்த்தகர் களிடையே எழுந்துள்ளது.

(i) அமெரிக்க உச்சநீதிமன்றம் வரிகளை ரத்து செய்துள்ளதே தவிர, வசூலிக்கப்பட்ட பணத்தைத் திரும்ப வழங்குவது தொடர்பாக தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கவில்லை. இதனால், வரியைச் செலுத்திப் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்குப் பல சட்டரீதியான சிக்கல்கள் உருவாகியுள்ளன.

(ii) வரிப்பணத்தைத் திரும்பப் பெற, அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் ஒவ்வொரு நிறுவனமும் தனித்தனியாக வழக்குத் தொடர வேண்டும். ஏற்கெனவே 1,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், இன்னும் ஆயிரக்கணக்கான புதிய மனுக்கள் தாக்கல் செய்யப்படும். எனவே, இந்த வழக்குகள் முடிந்து பணம் கைக்குவர பல ஆண்டுகள் வரை ஆகலாம் என்று கருதப்படுகிறது. பெரிய நிறுவனங்கள் சிறந்த வழக்குரைஞர்களை வைத்து வாதாடி. தங்களது பணத்தை எப்படியாவது திரும்பப் பெற்று விடும். ஆனால், அதிக பணம் கொடுத்து வழக்குரைஞர்களை நியமிக்க முடியாத சிறிய இறக்குமதி நிறுவனங்கள், தங்களுக்கு நியாயமாக வர வேண்டிய பணத்தை விட்டுக்கொடுக்கும் நிலை ஏற்படலாம் என வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

(iii) அதன்படி வேறு மாற்றுச் சட்டங்களின்கீழ், புதிய வரியை விதிக்க அதிபர் டிரம்ப் முனைப்பு காட்டி வருவது, இறக்குமதியாளர்கள் மத்தியில் மீண்டும் பெரும் குழப்பத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

3. ரஷியாவிலிருந்து வரும் கச்சாஎண்ணெய் விநியோகத்தை உக்ரைன் உடனடியாகச் சீரமைத்து தொடங்காவிட்டால், உக்ரைனுக்கு வழங்கப்படும் முக்கிய நிதி மற்றும் மின்சார உதவியைத் தடுத்து நிறுத்துவோம் என்று ஹங்கேரியும் ஸ்லோவாகியாவும் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

(i) உக்ரைன் போரை முன்னிட்டு பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ரஷியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. ஆனால், ஹங்கேரியும் ஸ்லோவாகியாவும் தங்கள் எரிசக்தி தேவைக்காக இப்போதும் ரஷியாவையே நம்பியுள்ளன. எனவே, அந்நாட்டுடன் இணக்கமான உறவைப் பேணி வருகின்றன.

(ii) இந்நிலையில் கடந்த ஜனவரி மாத இறுதியில், உக்ரைன் வழியாக இந்த நாடுகளுக்குச் செல்லும் எண்ணெய் குழாய்கள் சேதமடைந்து, எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது.

(iii) ரஷியாவின் ட்ரோன் தாக்குதலிலேயே எண்ணெய் குழாய்கள் சேதமடைந்ததாக உக்ரைன் கூறுகிறது. ஆனால், இதனை ஏற்க மறுக்கும் ஹங்கேரியும் ஸ்லோவாகியாவும், அரசியல் காரணங்களுக்காக உக்ரைன் திட்டமிட்டே விநியோகத்தைத் தடுத்துள்ளதாக குற்றஞ்சாட்டுகின்றன.

(iv) மாற்றுப் பாதைகளில் எண்ணெய்யைக் கொண்டு வர உக்ரைன் முன்மொழிந்தாலும், பழைய வழித்தடத்திலேயே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதில் இந்த இருநாடுகளும் பிடிவாதமாக உள்ளன.

(v) 'கடனுதவியைத் தடுப்போம்'...:

உக்ரைன் இவ்விவகாரத்தில் விரைந்து முடிவெடுக்காவிட்டால், அந்நாட்டின் ராணுவ மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக ஐரோப்பிய யூனியன் வழங்க திட்டமிட்டுள்ள 9,000 கோடி யூரோ மதிப்பிலான வட்டியில்லா கடனுதவியைத் தடுத்து நிறுத்தப்போவதாக ஹங்கேரி வெளியுறவு அமைச்சர் பீட்டர் சிஜார்டோ அறிவித்துள்ளார்.

(vi) 'மின்சாரத்தை நிறுத்து வோம்'..

- இதே விவகாரத்தில் ஸ்லோவாகிய பிரதமர் ராபர்ட் ஃபிகோவும் உக்ரைனுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.
- வரும் திங்கள்கிழமைக்குள் ரஷிய எண்ணெய் விநியோகம் சீராகாவிட்டால், உக்ரைனுக்குத் தடையின்றி வழங்கப்பட்டு வரும் அவசரகால மின்சாரத்தை உடனடியாக நிறுத்தப்போவதாகக் கூறியுள்ளார்.
- உக்ரைனின் ஒட்டுமொத்த மின்சாரத் தேவையில் சுமார் 18 சதவீதத்தை ஸ்லோவாகியா வழங்கி வருகிறது. ஏற்கெனவே, போரினால் மின்சாரக் கட்டமைப்பு சிதைந்துள்ள நிலையில், ஸ்லோவாகியாவின் இம்முடிவு உக்ரைனுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. இத்தாலியில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் கிராஸ் கன்ட்ரி ஸ்கீயிங்கில் ஆடவருக்கான 50 கி.மீ. மாஸ் ஸ்டார்ட்கிளாசிக் பிரிவில் தங்கம் வென்ற நார்வேயின் ஜோஹன்ஸ் ஹோஸ்ஃப்ளாட்கிளேபோ, ஒரே ஒலிம்பிக் போட்டியில் 6 பிரிவுகளில் தங்கம் வென்ற முதல் வீரராக சாதனை படைத்தார்.

5. ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவின்படி, எதிர்வரும் மார்ச் 31-ஆம் தேதிக்குள் நாட்டில் இருந்து நக்ஸல் தீவிரவாதம் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா உறுதிபட தெரிவித்தார்.

(i) அஸ்ஸாம் மாநிலம், குவாஹாட்டியில் நடைபெற்ற மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்) 87-ஆவது ஆண்டு தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் அமித் ஷா பங்கேற்றார். 3.25 லட்சம் வீரர்-வீராங்கனைகளைக் கொண்ட சிஆர்பிஎஃப்- இன் வரலாற்றில் வருடாந்திர அணிவகுப்பு வடகிழக்கு பிராந்தியத்தில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும்.

(ii) நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அதிவிரைவுப் படையினர், கோப்ரா படையினர் என பல்வேறு சிஆர்பிஎஃப் பிரிவுகளைச் சேர்ந்த வீரர்-வீராங்கனைகள் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

6. இந்தியா-பிரேஸில் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பை அடுத்த 5 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர்களாக (ரூ.1.81 லட்சம் கோடி) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பிரேஸிலிடம் இருந்து அரிய கனிமங்கள் கொள்முதலுக்கு வழிவகுக்கும் ஒப்பந்தமும் கையொப்பமிடப்பட்டது.

(i) புது தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி, பிரேஸில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பிறகு இது உள்பட பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. தற்போதைய புவி அரசியல் சூழலுக்கு இடையே பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதி பூண்டனர்.

(ii) ஐந்து நாள்கள் அரசுமுறைப் பயணமாக கடந்த பிப்.18-ஆம் தேதி இந்தியா வந்த பிரேஸில் அதிபர் லுலா டா சில்வா, புது தில்லியில் நடைபெற்ற சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாட்டில் பங்கேற்றார். பிரதமர் மோடியை சந்தித்த அவர், விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவது குறித்தும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய-சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இருவரும் ஆலோசித்தனர்.

(iii) அரிய கனிமங்கள் கொள்முதலில் சீனாவை நம்பியிருக்கும் நிலையைக் குறைத்து, கொள்முதலை பன்முகப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உலக அளவில் சீனாவுக்கு அடுத்து அதிக கனிமவளத்தைக் கொண்ட பிரேஸிலுடன் முக்கிய ஒப்பந்த கையொப்பமிடப்பட்டுள்ளது.

(iv) வர்த்தகத்தை அதிகரிக்க இலக்கு:

- கடந்த 2024-25 நிலவரப்படி, இந்தியா பிரேஸில் வர்த்தக மதிப்பு 12 பில்லியன் டாலராகும். இதில் ஏற்றுமதி 6.77 பில்லியன் டாலர்; இறக்குமதி 5.43 பில்லியன் டாலர். அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தக மதிப்பை 20 பில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.
- பிரேஸில் அதிபருடன் செய்தியாளர்களுக்கு கூட்டாக அளித்த பேட்டியில் பிரதமர் கூறியதாவது: லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளி பிரேஸில். நமது வர்த்தகம் வெறும் எண்ணிக்கை அடிப் படையிலானது அல்ல; நம்பிக்கையின் பிரதிபலிப்பு. இந்தியா-பிரேஸில் இடையே கையொப்பமாகியுள்ள அரிய கனிமங்கள் ஒப்பந்தம், மீள்திறன்மிக்க விநியோகச் சங்கிலி கட்டமைப்பை நோக்கிய முக்கியபடிக்கல்.

7. இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட ரண ஜன்னி (டெட்டனஸ்) மற்றும் தொண்டை அடைப்பான் (டிப்தீரியா) கூட்டுத் தடுப்பூசி மருந்துகளை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா அறிமுகம் செய்தார்.

(i) ஹிமாசல பிரதேச மாநிலம், கசௌலியில் உள்ள மத்திய ஆய்வு நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டஅவர், ரண ஜன்னி (டெட்டனஸ்) மற்றும் தொண்டை அடைப்பான் (டிப்தீரியா) கூட்டு தடுப்பூசியை அறிமுகம் செய்தார். இதன்மூலம், பொது தடுப்பூசி திட்டத்தின்கீழ் இந்த ஊசி கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் ஜெ.பி. நட்டா பேசி யதாவது:

- பிரதமர் மோடியின் தலைமையிலான மத்திய அரசு, சுகாதாரம் மற்றும் மருந்து துறைகளில் இந்தியா சுயசார்பு அடைய இலக்கு நிர்ணயித்து செயல்படுகிறது. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரண ஜன்னி தடுப்பூசி மருந்தை அறிமுகப்படுத்தியது. பொது சுகாதாரம் மருந்து தயாரிப்புத் துறைகளில் இந்தியா சுயசார்பு கொண்டதாக இருக்க வேண்டும் என்ற தொலை நோக்குத் திட்டத்தின் முக்கிய மைல்கல்லாகும்.
- வரும் ஏப்ரல் மாதத்துக்குள் மத்திய ஆய்வு நிறுவனம் 55 லட்சம் டோஸ் தடுப்பூசி மருந்தை அளிக்கும். பிறகு வரும் ஆண்டுகளில் விநியோகிக்கும் மருந்து அளவை மேலும் பல மடங்கு அந்நிறுவனம் அதிகரிக்கும். உலக அளவில் அதிக மருந்து தயாரிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது.
- கொவைட் பெருந்தொற்று காலத்தில் இந்தியா இரண்டு உள்நாட்டு தடுப்பூசிகளை ஒன்பதே மாதங்களில் உருவாக்கியது. அதை உலகெங்கும் 220 கோடி டோஸ்களாக விநியோகித்துள்ளது. இதில் பூஸ்டர் டோஸ்களும் அடங்கும்.
- உலக அளவில் நமது பொது தடுப்பூசி திட்டம்தான்தான் மிகப்பெரிய தடுப்பூசி திட்டமாகும். இதன் கீழ் 11 தடுப்பூசிகள் போடப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் 2 கோடி முதல் 2.5 கோடி குழந்தைகள் பிறக் கின்றன. பெண்கள் கர்ப்பம் தரித்தது முதல் பெண்கள் 'யூ-வின்' தளம் மூலம் கண்காணிக்கப்படுகின்றனர்.
- பிறக்கும் குழந்தைகளுக்கு அவர்கள் 16 வயது ஆகும் வரையில், 27 டோஸ் தடுப்பூசிகள்

போடப்படுகின்றன.

- ஒவ்வோர் ஆண்டும் நாட்டில் 5 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்படுகின்றன. அதில் 2.5 கோடி பேர் கர்ப்பிணிகள், 2.5 கோடி பேர் சிறார்கள். இந்தியாவில் ஏறத்தாழ 99 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றார் அவர்.

8.நாட்டின் வளர்ச்சிக்கு இந்தியாவில் 'சிப்' தயாரிப்பது முக்கியம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். கிரேட்டர் நொய்டா அருகே உள்ள ஜெவாரில் ஹெச்.சி.எல். குழுமம் மற்றும் ஃபாக்ஸ்கான் ஆகியவை கூட்டாக இணைந்து இந்தியா சிப் பிரைவேட் நிறுவனம்' என்ற பெயரில் சிப் தயாரிப்பு ஆலையை அமைக்கின்றன. நாட்டி பிரதமர் காணொலி வாயிலாக ஆலைக்கான அடிக்கல் நாட்டினார்.

(i) ஃபாக்ஸ்கான் தலைவர் - பாப் சென்

9. திடக்கழிவுமேலாண்மை தொடர்பாக நாடு முழுமைக்கும் புதிய விதிகளை உச்ச நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

(i) போபால் மாநகராட்சியின் சுற்றுச்சூழல் விதிகளுக்கு எதிரான தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் 2 உத்தரவுகளை எதிர்த்து தாக்கலான 2 மேல்முறையீட்டு மனுக்கள், உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் பங்கஜ் மித்தல்,எஸ்.வி.என்.பாட்டீ ஆகியோரை கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

- திடக்கழிவு விவகாரத்தில் அலட்சியமாக இருப்பது, நமது உடல்நலனை பாதிக்கும். நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும். சுத்தம் மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் ஆகியவை வாழ்வதற்கான உரிமையில் பிரிக்க முடியாத அங்கமாகும். ஆதலால் திடக்கழிவு மேலாண்மை விவகாரத்தில் தற்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லையேல், இனி எப்போதும் எடுக்க முடியாமல் போய்விடும்.
- எந்த நடவடிக்கையும் எடுக்காமல், நாம் இந்த பிரச்னை சரியாகிவிடும் என எதிர்பார்ப்பது சரியாக இருக்காது. கழிவு இல்லாத சுத்தமான இந்தியாவை உருவாக்குவது நம் அனைவரின் கடமையாகும். சுற்றுச்சூழலை பாதுகாப்பதும், குடிமக்களின் நலனை காப்பதும் மாநில அரசின் கடமை என நீதிமன்றங்கள் திரும்பத் திரும்ப தெரிவித்து வருகின்றன.

(ii) ஆட்சியர்கள் மூலம் ஆய்வு:

- திடக்கழிவு நிர் வகிப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும். அப்போது பிரச்னைகளை மாவட்ட ஆட்சியர்கள் கண்டறிந்து, அதற்கு தீர்வுகாண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை காலவாரியாக தலைமை செயலாளரிடம் அவர் அறிக்கை மூலம் தெரியப்படுத்த வேண்டும்.
- மேலும் உள்ளாட்சி அமைப்புகளிடம் மாவட்ட ஆட்சியர்கள், திடக்கழிவு தொடர்பான விதிகளை 100 சதவீதம் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.
- திடக்கழிவு எவ்வாறு மாநகராட்சிகளால், நகராட்சிகளால், கிராம பஞ்சாயத்துகளால் கையாளப்படுகிறது என்பதை கண்காணித்து, சம்பந்தப்பட்ட துறையிடம் அறிக்கை அளிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களிடம் அளிக்கப்பட வேண்டும்.
- அதேபோல் உள்ளாட்சி அமைப்புகளும் திடக்கழிவு விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை, அதில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்த வேண்டும்.
- திடக்கழிவை அகற்றுவது தொடர்பான இடங்களை தேர்வு செய்வது, கட்டமைப்புகளை உருவாக்குவது போன்ற பணிகளை மாசு கட்டுப்பாட்டு வாரியம் விரைவுப்படுத்த வேண்டும்.
- திடக்கழிவு தொடர்பான விதிகள் ஏப்ரல் 1 முதல் அம லுக்கு வருகிறது. இந்த விதி கள் தொடர்பான உச்ச நீதி மன்ற உத்தரவு நகலை, கழி வுகளை அதிகம் ஏற்படுத் துவோருக்கு உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி, மார்ச் 31-ஆம் தேதிக் குள் அதற்கு கட்டுப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

(iii) பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்க உத்தரவு:

- பள்ளி பாடத் திட்டத்திலும் திடக்கழிவு தொடர்பான விதிகள் குறித்த பகுதி இடம்பெறுவதை மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் உறுதி செய்ய வேண்டும்.
- பாடத்திட்டத்தில் உள்ளூர் மொழிகளில் இந்த விதிகள், மொழி பெயர்க்கப்பட்டு இருக்க வேண்டும்.

(iv) இந்த விதிகளை யாரேனும் கடைப்பிடிக்கப்படாமல் போகும்பட்சத்தில், அதை வெறும் நிர்வாக ரீதியில் ஏற்பட்ட குறைபாடாகக் கருதக் கூடாது. விதியை மீறுவோருக்கு எதிராக 3 வகையிலான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதில் அபராதம் விதிப்பதும் அடங்கும்.

(v) அதேபோல் தொடர்ந்து இதே தவறு இழைக்கப்பட்டால், அது கிரிமினல் குற்றமாக கருதப்பட்டு, கடமையை செய்யத் தவறிய அதிகாரிகள், விதிகளுக்குகட்டுப்படாதவர்கள் உள்ளிட்ட அனைவர் மீது சுற்றுச்சூழல் சட்டங்களின்கீழ் கிரிமினல் வழக்குத் தொடரவேண்டும்.

(vi) பொதுமக்களுக்கு விழிப்புணர்வு:

- ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் இந்த விதி அமலாவதை நீதிமன்றங்கள் மூலம் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் உறுதி செய்ய வேண்டும். இதேபோல் தீர்ப்பாயங்கள் மூலம் தீர்ப்பாயத் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
- திடக்கழிவு குறித்து மக்களிடையே உள்ளாட்சி அமைப்புகள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். திடக்கழிவை குறைவாக உருவாக்குவது, வீட்டிலேயே அதைப் பிரித்து, கழிவுகளை சேகரிப்போரிடம் ஒப்படைப்பது குறித்து பொதுமக்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

10. தமிழ் மொழியின் பெருமையை நிலைநாட்டுவதற்கு, ஆராய்ச்சிகள் மிகவும் அவசியம் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தினார்.

(i) உலக தாய்மொழி தினத்தை (பிப்ரவரி 21) முன்னிட்டு தமிழ் 'இந்தோ' ஐரோப்பிய மொழிகளின், வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி திட்டத்தின் 4-ம் தொகுதி நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

(ii) இந்த நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று, நூலை வெளியிட நார்வே பேராசிரியர் கிளாஸ் பீட்டர் சாலர் அதை பெற்றுக் கொண்டார். அந்நூல் 19 தமிழ் வேர்ச்சொற்களில் இருந்து, லத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் சொற்களும், சம்ஸ்கிருதம், பாலி, சிங்களம் போன்ற கீழை இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் சொற்களும், உருவான வரலாறு, கருதுகோள் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது.

(iii) தொடர்ந்து, சர்வதேச மொழியறிஞர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் நடைபெற்றது. அதில், தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு குறித்தும், தமிழ் 'இந்தோ' ஐ ரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி தொகுதிகள் பெற்றுள்ள சிறப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டன.

11. இந்திய அரசியல் சாசன சட்டத்தின் பிராந்திய மொழியாக்கத்தால் அது குறித்த விழிப்புணர்வு மக்களிடையே பெருகும் என்று குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

(i) சர்வதேச தாய்மொழி தினத்தை யொட்டி, இந்திய அரசியல்சாசன சட்ட புதுப்பிக்கப்பட்ட தமிழ் மற்றும் குஜராத்தி மொழி பதிப்புகள், சட்ட சொற்களஞ்சிய அகராதியின் (ஆங்கிலம் ஹிந்தி) எட்டாவது பதிப்பு ஆகியவற்றை தில்லியில் தனது மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்